THIRU A. R. DAMODARAN : Sir, the reason why I asked this is that I feel that the Executive Officer is primarily responsible for non-collection of lease amounts. The Council is not responsible. The Council only approves the tender and it is the duty of the Executive Officer to take action to collect this lease amount every month. May I request the Hon. Minister to find out whether there has been any collusion between the Executive Officer and the Contractors to avoid payment so as to throw the responsibility for further litigation on the Municipal Council?

The HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the point raised by the hon. Member will be given careful consideration and the responsibility fixed.

திரு. ஆ. தங்கவேல் : வழக்கு காலம் கடந்து தொடரப்பட்டதாகத் தெரிகிறது. எங்கே எப்போது வழக்கு தொடரப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை. நான் கேள்விப்பட்டவரையில், காலம் கடந்து வழக்கு தொடரப்பட்டதாகத் தெரிகிறது. அப்படியானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வழக்கு எப்போது தொடரப்பட்டது என்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் 1971 ஆம் ஆண்டிலே இருந்து 1975 ஆம் ஆண்டு வரை பல்வேறு வகையில் நிலுவைகள் இருந்து வருகின்றன. ஆகவே, இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நகராட்சி ஆய்வாளர் உத்தரவிட்டிருக்கின்றார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் (*) உடுக்குறி அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(பிற்பகல் 4-30)

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்திகள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டத்தின் 199-வது பிரிவுப்படி பணச் சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு, இம் மேலவையின்

1975 நவம்பர் 7]

பரிந்துரைக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவு பேரவைத் தலைவரால் அனுப்பப் பட்டுள்ளது :

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 51/1975).

சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம் மேலவையின் ஒப்புதலுக் காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட் டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்—

(1) 1975 ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 38/1975).

(2) 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 39/1975).

(3) 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 40/1975).

(4) 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 41/1975).

3. கவன ஈர்ப்பு.

தமிழ் நாட்டில் பள்ளிகளில் பணிபுரிந்துவரும் பி.ஏ. பட்டம் பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குக் கொடுத்து வந்த பி.எட். குறுகிய காலப் பயிற்சியை அரசு நீக்கியுள்ளது குறித்து.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" தமிழ் நாட்டில் பள்ளிகளில் பணிபுரிந்துவரும் செகண்டரி கிரேடு ஆசிரி யர்கள் பி.ஏ. பட்டம் பெற்ற பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களுக்கு இதுவரை கொடுத்து வந்த பி.எட். குறுகிய காலப் பயிற்சியை சமீபத்தில் அரசு நீக்கியுள்ளதால் பல நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப் பட்டுள்ளது குறித்து ".